| | |
|---|---|
| தி.மா.ஆ.நி<br>**DINDIGUL**<br>**D.R.B** | **கூட்டுறவு சங்கங்களின்**<br>**திண்டுக்கல் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,**<br>**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,**<br>**இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,**<br>**திண்டுக்கல் மாவட்டம் – 624004** |

## செய்தி வெளியீடு–Press Release

விளம்பர எண்.05/2020 நாள் – 28.11.2020

திண்டுக்கல் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் மூலம் அறிவிக்கை எண்.02/2020 மற்றும் 03/2020 நாள் : 12.03.2020 ன் படி, திண்டுக்கல் மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்களில் காலிப்பணியிடங்களாக உள்ள **"உதவியாளர் / எழுத்தர்"** பதவிகளுக்கு முறையே 21.11.2020 மற்றும் 22.11.2020 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தேர்வுகளில் கொள்குறி வகை வினாக்களுக்கு உத்தேச விடைகளை (Tentative Answer keys) மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தின் இணையதளத்தில் 28.11.2020 அன்று வெளியிடப்பட்டுள்ளது. தேர்வெழுதிய விண்ணப்பதாராகள் அவரவர் எழுதிய கொள்குறி விடைகளை மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்தில் சரிபார்த்துக்கொள்ளலாம். உத்தேச விடைகள் மீது மறுப்பு ஏதேனும் இருப்பின் 04.12.2020க்குள் விண்ணப்பதாரர்கள அவர்தம் தேர்வு நுழைவுச்சீட்டு , பதிவு எண், வினா எண், வினாவின் உத்தேச விடை, அவ்வினாவிற்கான விண்ணப்பதாரர் கூறும் விடை போன்ற தகவல்களை தெளிவாக குறிப்பிட்டு, drbdindigul@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பதாரர் தங்கள் மனுக்களை அனுப்பலாம் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. 04.12.2020க்கு பின்னர் பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படாது. மேலும், விண்ணப்பதாரர்கள் தெரிவித்த விடைக்கு வலுச்சேர்க்கும் வகையில் உரிய ஆவணங்களை PDF கோப்புக்களாக மின்னஞ்சலுடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர்கள் தெரிவிக்கும் விடைகள் எந்த புத்தகத்தில் உள்ளது என்பதற்கான தகவல்களும் மற்றும் விடைக்கு வலுச்சேர்க்கும் உரிய ஆவணங்களும் இல்லாத கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**இணைப்பதிவாளர்/தலைவர்,**
**திண்டுக்கல் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,**
**திண்டுக்கல்.**